# மட்டு. மாவட்ட படுகொலைகளுக்கு ராணுவமே பொறுப்பு!

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற படுகொலைகளுக்கு மட்டு.மாவட்ட இராணுவ உயர் அதிகாரியே காரணம் என மனித உரிமைகள் குழுவின் உயரதிகாரி குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:

எம்பிலிப்பிட்டியாவில் 32 பாடசாலை மாணவர்களை கடத்திச் சென்று படுகொலை செய்தது. மட்டக்களப்பு வந்தாறு மூலை இராணுவ முகா

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 29 இதழ் 240
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15 — 10 — 1993

## துட்டகைமுனுவின் வழியை அரசு பின்பற்ற வேண்டும்

### - பௌத்த பிக்கு கேண்டுகோள்

(கொழும்பு)

பண்டைய சிங்கள மன்னன் துட்டகைமுனுவின்வழியையே ஸ்ரீலங்கா அரசும் பின்பற்ற வேண்டுமென அனுமா தர்ம ஜோதி தேரர் அரசைக்கோரியுள்ளார்.

கடந்த 10ம் திகதி அனுராதபுரம் ஜெய்ஸ்ரீ மகாபோதியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினரின்44வது ஆண்டு பூர்த்தி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகை

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் விவகாரம்:

# இந்தியாவுக்கு நிலையை விளக்க இல. குழு புதுடில்லி விரைவு!

(கொழும்பு)

கச்சதீவு கடற்பகுதியில் அண்மையில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இந்திய மீனவர்கள் பலியானதையடுத்து இலங்கை-இந்திய அரசுகளுக்கிடையில் ஏற்பட்ட முறுகல்நிலையைத் தணிக்கும் விதத்தில் இலங்கை அதிகாரிகள் குழு ஒன்று புதுடில்லி விரைந்துள்ளது. இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையில் இது சம்பந்தமான ராஜதந்திர பேச்சுவார்த்தைகள் இன்று புதுடில்லியில் ஆரம்பமாகின்றன. இலங்கையின் நிலைகுறித்து இந்திய அதிகாரிகளுக்கு இந்தப் பேச்சுவார்த்தையின்போது தெளிவுபடுத்தப்படும்.

(4ம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மீனவர்க்கு இல. அரசு மூலம் நஷ்டஈடு?

(புதுடில்லி)

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர் சுடப்பட்டு இறந்தது தொடர்பாக இருநாடுகளின் உயர்மட்ட அதிகாரிகளிடையே புதுடில்லியில் தற்போது அவசரப் பேச்சுவார்த்தைகள் தமிழ்நாட்டு அரசின் நெருக்கடியாலேயே ஆரம்பமாகியுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் கூறுகின்றன. இப்பேச்சுவார்த்தை இலங்கைக் கடற்படையின

(2-ம் பக்கம் பார்க்க)

## போரில் அங்கவீனமாகும் படையினர்க்கு காணிகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தமுனைகளில் விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் அங்கவீனமடையும் படையினருக்கு அரசு காணிகளை வழங்கியுள்ளது.

27 படையினருக்கு களுத்துறை, கோப்பிவாவத்தைப் பகுதியில் இக்காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

25 இராணுவ சிப்பாய்கள், 1 கடற்படை சிப்பாய், ஒரு

(4-ம்பக்கம் பார்க்க)

## காலி துப்பாக்கிச் சூடு சம்பவம்:

# மரணவிசாரணை விபரங்களை வெளியிட அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கடந்த செவ்வாய்க்கிழமை காலியில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான இருவரின் மரணவிசாரணை நேற்று நடைபெற்றது.

இந்த விசாரணை குறித்து எதனையும் வெளியிடுவதற்கு வெகுசன தொடர்புத்துறையினர்க்கு அனுமதி மறுக்கப்பட்டது.

சிறி கொடகொட பதவி கொண்டோர் மீது இத்துப் போற்றயின் இடம்பெற்ற வர பாகம் பிரயோகம் மேற்கொண்ட வைபவத்தில் கலந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## சக்திவாய்ந்த துப்பாக்கி சூட்டினால் மரணம்

(கொழும்பு)

கடந்த செவ்வாய்க்கிழமை தென்மாகாணசபையின் புதிய முதலமைச்சராக திரு. அமரவீர்ந்த துப்பாக்கிகளினால் காலியில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான இருவரும் சக்தி சுடப்பட்டதால் மரணமானார்கள் என மரணவிசாரணை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிரான தாக்குதல் தொடரும்

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டு தலைமையலுவலகம் நேற்று தெரிவித்தது.

இதேவேளை நேற்று முன்தினம் முல்லைத்தீவில் தெற்குப் பகுதி மற்றும் பூநகரிப்பகுதி

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 'திரான்சா' ராணுவ நடவடிக்கை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் 'திரான்சா' என்ற பெயரில் பாரிய இராணுவநடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இந்த நடவடிக்கையின் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றுவருவதாகவும், குறிப்பாக மூதூர் பகுதி

(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னையைத் தீர்க்க சர்வதேச உதவி

(கொழும்பு)

இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு சர்வதேச உதவி நாடப்படவுள்ளது. சர்வதேசஅமைப்புக்களின் தலையீடு இல்லாமல் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என தெரிகிறது. ஏனெனில் இலங்கை அரசுக்கு இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான எந்த ஒரு அரசியல் வல்லமையும் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(2-ம் பக்கம் பார்க்க)

## அநுராவின் எம்.பி.பதவிக்கு புதியவரை நியமிக்க கட்சி முடிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து திரு. அனுரா பண்டாரநாயக்கா ராஜினாமாச் செய்ததை அடுத்து வெற்றிடமாகவுள்ள அவரது பாராளுமன்ற எம். பி. பதவிக்கு புதிய எம். பி. ஒருவரைத் தெரிவுசெய்ய கட்சி முடிவு செய்துள்ளது.

இதேவேளையில் திரு.அனுர பண்டாரநாயக்கா கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்தது

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 125 தமிழ் மீனவர் கைது

(மன்னார்)

மன்னாரில் 125 தமிழ் மீனவர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மன்னார் கடலில் கடல் அட்டைகளைப் பிடித்துக் கொண்டிருந்த இந்த 125 மீனவர்களும், இராணுவத்தலைமையின் அனுமதியின்றி கடலுக்குச் சென்றதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதேநேரம் தாம் அனுமதி பெற்றே கடலுக்குச்

(4-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### தாரணி
### (கேள்வி பதில் சஞ்சிகை)

சோதிடம், மருத்துவம், குடும்ப, அந்தரங்க பிரச்னைகள், அறிவியல், இலக்கியம் சம்பந்தமான கேள்விகளை அஞ்சலட்டையில் அனுப்பலாம். பதிலளிக்கப்படும்:- தாரணி, 55, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (ஏ-3484)

### இன்று சனி (மகரத்திற்கு) மாற்றம்

25 நாளின் சஞ்சரித்தபின் மீண்டும் (10-11-93) கும்பத்திற்கு மாற்றம். வியாழன், சனி மாற்றம் விற்பனையாகிறது. ரூ 10/- ஜீக்கா ஸ்ரேசனரீஸ், சுன்னாகம். (நூனைசிறி வழி-"சத்யா"). (இ-524)

### விற்பனைக்கு

(1) 10 அடி 8 அங். நீளமான இரண்டு கனி முதிரை கண்ணாடி அலுமாரி, (2) 5 அந்தர் அவெரி நியு மொடல் தராசு விற்பனைக்குண்டு. சி. பரமசாமி வெற்றிலை வியாபாரம், மாக்கட், பெரிய கடை, யாழ்ப்பாணம். (இ-521)

### COMPUTER கல்வி

Diploma in Computer Programming - Basic Language புதிய பிரிவு ஆரம்பம்- 17-10-93 8-30 மணி. C. I M A, I. A. B, வகுப்புகள் நடைபெறுகின்றன. உறுதியான கல்வியைப் பெற School of Business Administration, 6, 3வது குறுக்குவீதி, யாழ்ப்பாணம் (இ-520)

### வைத்தியம்

செங்கமாரி, (Hepatitis) குடற்புண், ஈரல், வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைவாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குழப்பம், இரத்தப்போக்கு, வெள்ளைக்கழிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-475)


**அறிவுக் களஞ்சியம்**
சிறப்புப் பொதுஅறிவுப்போட்டியில்
**வினாடி வினாப் போட்டியும் ★ பரிசளிப்பு விழாவும்**
16-10-93 சனி காலை 9-50க்கு யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில்.
அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
(எ-3499)


## போர்க்கால தெருக்கூத்து

(அரியாலை)

யாழ். இரசாவின் தோட்டம் அருள்மிகு ஆலய முன்றலில் கடந்த 12ம் திகதி இரவு கருத்தரங்கும், போர்க்கால தெருக்கூத்தும் நடைபெற்றன. (59)

# நகைக் கடையில் நள்ளிரவில் திருட்டு

(நெல்லியடி)

நகைக்கடையை உடைத்து உட்சென்ற திருடர் கோஷ்டி பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகரச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள நகைக்கடையிலிடம் பெற்றுள்ளது.

பெறுமதிமிக்க வெள்ளிநகைகள் 15 சோடி, காப்பு, கொலுசுகள், டிஸ்கோ பவுண் தோடுகள், மாணிக்கக் கற்கள், மரகதக் கற்கள் போன்றவையே திருடப்பட்டுள்ளன.

இதுபற்றி நகைக்கடை உரிமையாளர் ஆ. செல்வநாயகம் பருத்தித்துறை தமிழீழ காவல் துறையிடம் புகாரிட்டுள்ளார். -160

## நூல்கள் விநியோகம்

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து மன்றத்தால் நடாத்தப்படும் சைவ சமய நூலகம் முன்னர் அங்கத்தவர்களுக்கு மட்டும் சமய நூல்களை இரவலாக வாசிக்க கொடுத்து வந்தனர்.

தற்போது ஆலயத்திற்கு வழிபட வருவோருக்கும் நூல்களை வாசிக்க கொடுத்து வருவதாக மன்றத்தலைவர் திரு. கு. ஞானேஸ்வரன் தெரிவித்துள்ளார். (154)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பெண்களும் சுகாதாரமும் விடயம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும்.

# பாடசாலை வளர்ச்சியில் அதிபர் பங்கு முக்கியமானது

(உடுவில்)

"பாடசாலையின் வளர்ச்சியில் அதிபரின் பங்கு முக்கியமானது. ஐந்து பிள்ளைகளுடன் ஆரம்பித்த இப்பாடசாலை, அதிபரின் பெருமுயற்சியினால் இன்று 75 பேராக உயர்ந்திருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைக்கு இப்பாடசாலையை ஆக்கும் முயற்சிகளில் அதற்கான படி முறைகளை மேற்கொண்டு வரும் அதிபர் க. கணேசலிங்கம் பாராட்டப்பட வேண்டியவர்".

நவாலி ஸ்ரேசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கதம்ப விழாவில் உரையாற்றிய சண்டிலிப்பாய் பிரதேச கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு ஐ. மனோகரன் மேற்கண்டவாறு கூறினார்.

கதம்ப நிகழ்ச்சியில் நாதஸ்வரம், வயலின், கிற்றார் இசைகள், நடன நிகழ்ச்சிகள் போன்ற பல சுவையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. -109-இ

# கிராமங்கள் தோறும் போர்க்கால கருத்தரங்கு

(உடுவில்)

தற்பொழுது நாட்டிலேற்பட்டுள்ள போர்க்காலச் சூழ்நிலைகளை முன்னிட்டு கிராமங்கள் தோறும் போர்க்காலக் கருத்தரங்குகளை தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்தி வருகின்றனர். ஒவ்வொரு வட்டாரப் பிரதேசப் பொறுப்பாளர்களாலும் ஒழுங்கு செய்யப்படுமிடங்களில் கருத்தரங்குகளை நிகழ்த்தி வருகின்றனர்.

போர்க்கால சூழ்நிலையில் மக்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள், பங்களிப்புகள் பற்றிய கருத்துரைகளும் போர்க்காலநிகழ்ச்சிகளையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வீதி நாடகங்களும், கடந்த மாதங்களில் நடைபெற்ற நிகழ்வுகளைக்கொண்ட ஒளிவீச்சு படக்காட்சிகளும் நடைபெற்று வருகின்றன.

கட்டுடை மேஜர்சுபாஸ் சனசமூக நிலையம், கட்டுடை நைற் அன்ட் வைற் மைதானம், மானிப்பாய் வடக்கு திருவள்ளுவர் சனசமூகநிலையம், சங்குவேலி வெட்டைக்கட்டைப் பிள்ளையார் வீதி, உடுவில் சின்னக்குளத்தடி, உடுவில் நாவலடி வைரவர் கோயில், சுன்னாகம் பழனியாண்டவர் கோவில் ஆகிய இடங்களில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (109)

யாழ். நகரில்—

# வீதி விளக்குத் திட்டம் ஒரு வருடம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் வீதி விளக்குத் திட்டம் ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இத்திட்டம் ஆரம்பத்தில் யாழ். நகரின் பிரதான சந்திகளில் மட்டும் ஒரு சில விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. தற்பொழுது யாழ். நகர் பூராவும் 214 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ். மாநகரசபை மின்சார பொறியியலாளர் திரு. வி. நவரத்தினராஜா தெரிவிக்கையில்: "யாழ் குடாநாட்டின் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மின்சாரம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. இரவு நேரத்தில் யாழ். நகர் எங்கும் இருளாகச் சூழ்ந்திருந்தது. இதைக் கருத்தில் கொண்ட யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் எடுத்த தீவிர முயற்சி காரணமாக இந்த வீதி விளக்கு திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

எமது இந்தத் திட்டத்தில் ஆகக் குறைந்தது 500 விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட போதிலும் விளக்குகள் அமைப்பதற்கான மூலப் பொருட்கள் மற்றும் மண்ணெண்ணை தட்டுப்பாடு காரணமாக எமது திட்டத்தை இதுவரை பூரணப்படுத்த முடியவில்லை.

இந்தத் திட்டத்துக்கு புனர்வாழ்வு அமைச்சு ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கித்தருவதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும் இந்தத் தொகையிலிருந்து இதுவரை ஒரு பகுதியேனும் தரப்படவில்லை என்றும் தெரிவித்தார். —162-இ

## கலைமகள் விழா

(யாழ்ப்பாணம்)

நல்லைத் தமிழ்ச் சங்கம் அளிக்கும் இலக்கிய அரங்கம், கலைமகள் விழா இருபாலை தெற்கு இல்லத்தில் "கலைமகள் அரங்கில்" 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும்.

## விசேட பொதுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டி இந்து மயான பரிபாலன சபையின் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமைமாலை 3-30மணிக்கு யாழ். ஈச்சமோட்டை சனசமூக நிலைய மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. ம. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். (154)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம் நடாத்தும் கல்விக் கண்காட்சி நேற்றுக்காலை ஆரம்பமானது இந்தக் கல்விக் கண்காட்சி இன்று மாலை 5-00 மணி வரை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கண்காட்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், யாழ். மாநகர சபையின் சுகாதாரப்பிரிவினர் குருநகர் கடல் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றுக் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சிகளும் இடம்பெறுகின்றன. (162)

இன்று சர்வதேச

## வெள்ளைப் பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் இன்று 15-ம் திகதி சர்வதேசரீதியில் கொண்டாடப்படுகிறது.

இதனை யொட்டி யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் வெள்ளைப் பிரம்பு பற்றி விழிப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் இன்று 15-ம் திகதி வெள்ளிக்கிழமையும், 18-ம் திகதி திங்கட்கிழமையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகிய கல்லூரிகளில் தமது அங்கத்தினரைக் கொண்டு உரைகள் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியை யாழ் லயன்ஸ் கழகம், யாழ். வட்டலியோ கழகத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்துள்ளது.

## இலக்கிய பேரவையின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கியவட்டத்தின் இலக்கிய பேரவையின் கடந்த ஆண்டுக்கான சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழா இம்மாதம் பதினேழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவுக்கு யாழ். மாவட்ட பிரதி ஆணையாளரும், யாழ். இலக்கிய வட்டத் தலைவருமான ஆ. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார். பரிசளிப்புரையை 'விளக்கு' சஞ்சிகை ஆசிரியர் எஸ். சரவணபவனும், இலக்கியப் பேரவை அறிக்கையை சரவை அந்தரம் பிள்ளையும் வழங்குவர்.

இவ்விழாவில் கலாநிதி இ. பாலசுந்தரம், செங்கை ஆழியான், எம். குருவானந்தன், வஞ்சிநாதன், வ இராசையா, கலாநிதி நா. ஞானகுமாரன், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, அநு. வை. நாகராஜன் ஆகியோருக்கு தலா ஆயிரம் ரூபாவும் சான்றிதழ்களும் பரிசாக வழங்கப்படும். (எஸ்)

## மஹாநவசண்டி ஹோமயாகம்

(அரியாலை)

சாவகச்சேரி துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் 25ம் திகதி திங்கள் முதல் 27ம் திகதி புதன்கிழமைவரை மஹா நவசண்டி ஹோம யாகம் நடைபெறவுள்ளது -59

## தமிழ்மொழித் திறன் தேர்வு

(கொழும்புத்துறை)

அகில இலங்கைத் தமிழ் மாமன்றம் நடாத்தும் தமிழ் மொழித்திறன் தேர்வு நடாத்தச் சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வருடா வருடம் பாடசாலை மாணவர்களிடையே தமிழ் மொழி அறிவை வளர்க்கும் நன்நோக்குடன் இம்மன்றம் தமிழ்மொழித்திறன் தேர்வை நடாத்தி வருகிறது. இத்தேர்வில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம்.

மாணவரின் முழுப்பெயர், வகுப்பு, கையொப்பத்துடன் விண்ணப்பப்படிவத்தையும் பரீட்சைக் கட்டணத்தையும் எதிர்வரும் 18ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக செயலாளர், பரீட்சைக்குழு, தமிழ்மாமன்றம், இருபாலை என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது -154

### பாதிக்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராக் கொல்லப்பட்ட மீனவர்களுக்கும் காயமடைந்த மீனவர்களுக்கும் இலங்கை நஷ்டஈடு வழங்குவது குறித்தும் இதுபோன்ற சம்பவங்கள் வருங்காலத்தில் நடைபெறமாட்டாது என்பதை இந்திய அரசுக்கு உறுதிமொழிவழங்குவது தொடர்பாகவே இருக்கும்.

இதேநேரம் கச்சதீவில் இலங்கை கடற்படையினர் நிலைகொண்டிருப்பது குறித்து தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு கடந்தகாலங்களில் தெரிவித்து வந்த கடும் ஆட்சேபம் பற்றியும் பேச்சுக்கள் நடைபெறலாம் என்றும் ஏஜன்ஸி செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. -இ

### இனப்பிரச்னையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த நாட்டில் இனப்பிரச்னையே முக்கிய பிரச்னையாகும். இதில் அரசியல் தீர்வும் அடங்கியுள்ளது.

இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளைத் தெரிவிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி விஜேதுங்கா திடீரென இந்த நாட்டில் இருப்பது இனப்பிரச்னையல்ல பயங்கரவாதப் பிரச்னையே என தெரிவித்துள்ளார்.

அரசு இந்தப் பிரச்னையை அடிப்படையைவிட்டு இப்போது வேறு ஒரு கோணத்தில் பார்க்கிறது இப்படியான ஒரு சிந்தனை இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைக்க உதவாது.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை வெல்லாம் சந்தித்து இனப்பிரச்னை தொடர்பாக அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசுக்கு அரசியல் வழிமுறை எதுவும் கிடையாது என அவர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது என்றார்.

இதேவேளை இனப்பிரச்னை விவகாரத்தில் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவைவிட தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கடும்போக்கையே கடைப்பிடித்து வருவதாக தமிழ் மக்கள் கருதுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. -இ

மணிவாக்கு

காலத்தை ஒத்திப் போடாதே; தாமதத்தின் முடிவுகள் ஆபத்தானவை.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

# நமது நோக்கு

## வெள்ளைப் பிரம்பு!

விழிப்புணர்வற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்பினைத் தந்து வழிகாட்டும் முயற்சி சில ஆண்டுகளாக நல்ல பயனைத் தந்து வருகின்றது.

கண்பார்வை அற்றவர்களைச் சமூகத்தில் ஒதுக்கி வைக்காது, மறுவாழ்விற்கான சிறு உதவிகளைச் செய்தால், அவர்கள் தாமாகவே தமது கருமங்களைச் செய்வார்கள்.

ஹெலன் கெலர் அம்மையார் கண்பார்வை அற்றவராக இருந்தும், செய்த சாதனைகள் நல்ல வழிகாட்டலாக அமைகின்றன.

பிறவியிலேயே கண்பார்வை அற்றவர்களாக இருப்பவர்களைவிட இடையிலே கண்பார்வை இழப்போர் தொகையும் கணிசமானதாகும்.

எமது சமுதாயத்திலே உடல்நலம் பேணுவதற்கான அறிவு பூரணமானதாக இல்லை என்பது ஒரு குறை.

அதைவிட, பெற்ற அறிவை நடைமுறைப்படுத்தும் மனப்போக்கு போதியளவு வளரவில்லை என்பது பெரும் குறையாகும்!

கண்ணை இமை காப்பது போல இராமனும் இலட்சுமணனும் வேவிலி வாழ்ந்தார் என்ற கம்பராமாயண உவமையில் ஊறித்திளைத்தவர்கள் தமிழ்மக்கள்.

அதனால்தானோ, என்னவோ, கண்ணை இமை காக்கட்டும், நமக்கேன் அந்தக் கவலை என்றிருக்கிறார்களோ தெரியவில்லை!

இதேவேளை, சர்வதேச மட்டத்தில், சிலவகை உணவுக் குறைபாட்டினால் குழந்தைகளின் கண்பார்வை மங்கிப் போவதைத் தடுப்பதற்கான முயற்சி ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

உலக சுகாதார நிறுவனம், உணவு விவசாயத் தாபனம், யூனிசெவ் போன்ற நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் சம்பியாவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இருவர்களின் கண்பார்வை மங்கிப்போவதற்கான ஒரு காரணம் வைட்டமின் 'ஏ' குறைபாடு என்பதால், அந்த வைட்டமினும், கரோட்டினும் நிறைந்த காய்கறிகளை உற்பத்தி செய்து உணவில் சேர்க்கும் திட்டம் 1991ல் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்காக, ஆசிரியர்கள், விவசாயப் பணியாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இத்தகைய முயற்சிகள் இங்கும் செயற்படுத்தப்பட்டால், கண்பார்வை மங்குதல் ஓரளவிற்காயினும் தடுக்கப்படலாம்!

★ பம்பாயில் கொடூரம்

# கடுகதி ரயில் மோதியதில் 40 பெண்கள் உடல்சிதறிப்பலி

(பம்பாய்)

பம்பாய்நகர் அருகே நடந்த மிக்க கொடூரமான ரயில் விபத்தொன்றில் 40 பெண்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள். மற்றும் 60 பேர் படுகாயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் நிகழ்ந்தது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

மழை நேரம் மின்னல் தாக்கியதில் மின்கம்பியில் ஏற்பட்ட தீ, ரயில் பெட்டி ஒன்றிற்கும் பரவியது. பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்கள் பலர் இத் தீயினைக் கண்டதும் பயத்தின் காரணமாக ரயிலில் இருந்து கீழே குதித்தனர். அந்த நேரம் அதிவேகமாக வந்த மற்றொரு கடுகதிரயில் இந்தப் பெண்கள் மீது மோதியதில் உடல் சிதறி சின்னாபின்னமாகி 40 பெண்கள் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

மற்றும் படுகாயமுற்று மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற 60 பேரில் 10 பெண்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பி.ரி.ஐ செய்தி தெரிவிக்கிறது.

சம்பவம் நடந்த உடனேயே ரயில்வே அதிகாரிகளும், டாக்டர்கள் குழு ஒன்றும் அந்த இடத்திற்கு விரைந்து சென்றபோதும் மழை இருள், மின்வெட்டு காரணமாக மீட்புப் பணிக்குச் சிரமமேற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ரயில்வே அமைச்சர் திரு. சி.கே. ஜவர் செரீப் இந்த விபத்துக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார். -கே-கி

கட்டிடத் தொழிலாளர்

## நிவாரணம் வழங்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(மானிப்பாய்)

கட்டிடத் தொழிலாளர்கள் தமக்கு நிவாரணம் தருமாறு கோரி யாழ்.மேலதிக அரசாங்க அதிபரிடம் கடந்த புதன்கிழமை மகஜர் ஒன்றை கையளித்தனர்.

யாழ் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக தொடர்ந்து இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையினால் 10 ஆயிரம் கட்டிடத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு முன்னர் 3 தடவைகள் யாழ் அரச அதிபரின் அனுமதியுடன் நிவாரணம் வழங்கப்பட்டு பின்னர் நிறுத்தப்பட்டுள்ளது.

இவற்றைத் தொடர்ந்து வழங்குமாறு இந்த மகஜர் மூலம் கோரப்பட்டுள்ளது. (71-ரி)

## உரும்பிராயில் விவசாய ஊக்குவிப்பு பிரதேசம்

(உடுவில்)

விவசாய உற்பத்தி ஊக்குவிப்புத்திட்டத்தின்கீழ், உரும்பிராய் வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவு ஊக்குவிப்புப் பிரதேசமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாய செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இப் பகுதியில் உள்ள கிராமிய உற்பத்திக் குழுவினரின் உதவியுடன் ஆறு விவசாயிகள் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விவசாயிகளின் விவசாய தேவைகளுக்கென ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஏழாயிரத்து ஐநூறு ரூபா கடன் வசதிசெய்து கொடுத்து விவசாய செய்கையை ஊக்கப்படுத்த பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முடிவு செய்துள்ளது. (109 - ரி)

## மோட்டார் ஊர்தி பதிவின் இறுதிக் கட்டம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் ஊர்திப் பதிவின் கால எல்லை 23-10-1993 உடன் முடிவடைகின்றது. எனவே யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து மோட்டார் ஊர்தி உரிமையாளர்களும் தங்கள் ஊர்திகளை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிறிலங்காவால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும், மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

பதிவுகள் மேற்கொள்ளவருபவர்கள் தத்தமது குடும்ப அட்டைகளையும் தவறாது எடுத்துவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் வார நாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 3-30 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8-30 தொடக்கம் 1மணி வரையும் தொடர்புகொள்ளுமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

## பிறப்பு பதிவு புத்தகங்கள்

கொழும்புத்துறை:

யாழ். செயலக பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் அலுவலகத்திற்கு பிறப்புப் பதிவுப் புத்தகங்கள் கப்பல் மூலம் வந்துள்ளன. (154)

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

1994ம் ஆண்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி வேலைகளுக்கு 1391 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளதாக நேற்று அறிவித்தது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள செயலாளர்பிரிவுக்குட்பட்ட 187 செயலாளர் பிரிவுகளிலுமுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு மேற்படி பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (வி)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சித்தவைத்திய மருத்துவர்கள் உதவி சித்த மருத்துவர்களுக்கான இரண்டுநாள் கருத்தரங்கு நாளை 16ம் திகதி சனிக்கிழமையும் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வ. பெர. பாலசிங்கம் தலைமை உரை நிகழ்த்துவார். -162

காரைநகரில்

# 20 இளைஞர்கள் என் முன்னால் சித்திரவதை செய்யப்பட்டனர்

(அரியாலை)

"காரைநகரில் இருபதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் என் கண்முன்னாலே சித்திரவதை செய்யப்பட்டதை நான் நேரில் பார்த்து வேதனையடைந்தேன்" இவ்வாறு காரைநகரிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட எழுபது வயது மூதாட்டி ஒருவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

காரைநகரிலிருந்து சுகயீனம் காரணமாக அண்மையில் நான் கப்பல்மூலம் யாழ். நகர் வந்து சேர்ந்தேன். நான் எனது மக்களைப் பார்க்க வேண்டும் சுகயீனமாக இருக்கும் என்னைப்பார்க்க யாருமே இல்லை என காரைநகர் இராணுவ அதிகாரியிடம் முறையிட்டேன் அப்போது அவர் கடற்படைக் கப்பல் நீலங்காடு துறையில் நின்றது. என்னை ஜீப்பில் ஏற்றி அங்கு கொண்டுபோய் விட்டார்கள் அங்கு ஒரு முகாம் இருந்தது. அதில் 20க்கு மேற்பட்ட இளைஞர்கள் என் கண்முன்னாலேயே சித்திரவதைச் செய்யப்படுவதைக் கண்டேன்.

இவரை காரைநகர் நீலங்காடு துறையிலிருந்து காங்கேசன் துறைக்கு கப்பலில் கொண்டு சென்று அங்கிருந்து பருத்தித் துறைக்கு கப்பலில் சென்று செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் மூலம் இங்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (59-ரி)

எதிர்காலம் இளைப்பாற
நாட்டுவோம் மரக்கன்று

## பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

"அறிவுக்களஞ்சியம்" சஞ்சிகையின் சிறப்பு பொது அறிவுப் போட்டியின் இறுதி நிலைப் போட்டியும் பரிசளிப்புவிழாவும் நாளை சனிக்கிழமை காலை 9-50 மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பரிசளிப்பு விழாவின் தலைமையுரையை செங்கை ஆழியான நிகழ்த்துவார். பரிசளிப்புரையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிகளைலா வழங்குகின்றார். -ம

## இன்று

(அரியாலை

ஏழாலை மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று 15ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு கோத்தணி அதிபர் சி. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. (59)

0 0 0

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து மன்றம் சரசாலை மாணவர்களிடையே ஆண்டு மூன்று முதல் ஆண்டு பதினொன்று வரை சைவசமய பாடப் பரீட்சை ஒன்றை நடாத்தவுள்ளனர். இன்று 15ம் திகதி வெள்ளிக்கிழமை இப் பரீட்சைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆசிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவையின் தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்திவரும் வாராந்தர கருத்தரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு "பக்தியாக" என்ற தலைப்பில் கலாநிதோகன் சின்னமணி சொற்பொழிவு நிகழ்த்துவார். அறிமுக உரையை பா. விக்னேஸ்வரன் வழங்குகிறார். (ம)

## இராசிபலன்

15 10-1993

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 29)

அமாவாசை மு. இ 6-03 வரை, அத்தம் மு. ப. 10-09 வரை அமிர்தசித்தயோகம் இராகுகாலம் காலை 0-32 முதல் 12-02 வரை, சுபநேரம் காலை 6-02 முதல் 7-32 வரை, அமாவாசை விரதம்.

மேஷம்: காரியசித்தி, சமயோசித புத்தி, மாதர் நேசம்.

இடபம்: பயந்த மனம், பணமுடை, கிரோத நேசம்.

மிதுனம்: கோபப் பேச்சு, காரியகேடு, குடும்ப கவலை.

கடகம்: சந்தோஷ செய்தி, புதிய உறவு, தொழில் லாபம்.

சிம்மம்: தந்திரப் பேச்சு, தொழில் குழப்பம், பயனற்ற செயல்.

கன்னி: பெரியோர் சந்திப்பு, அதிக வருமானம், பாராட்டு.

துலாம்: மனச்சோர்வு, அவசரபுத்தி, வெளியார் துன்பம்.

விருச்சிகம்: வியாபாரத்தில் சமாதானம், அமைதி, பயணம்.

தனுசு: உறவினர் அனுகூலம், தொழில் லாபம், மனமாற்றம்.

மகரம்: பிடிவாதம், புதிய முயற்சி, வைகரிய செலவு.

கும்பம்: மன ஏக்கம், முயற்சி பலனளிக்காமை, யோசனை.

மீனம்: சுறுசுறுப்பு, இனிய உரையாடல், பெருமதிப்பு.

— ஜோஸ்யர்

